## முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

2024 ம் ஆண்டு ஜூன் மாதம் 10-ம் தேதி 1ம் பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண். 460 /2019

பிவா.சா.1 **சாமியப்பன்**

**4,5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2ம் பிரதிவாதியும், இறந்து போன கதிர்வேல் ஆகியோர்கள் எனது மகன்கள் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி இறந்து போன எனது மகன் கதிர்வேலின் மனைவி என்றால் சரிதான். 4,5 பிரதிவாதிகள் எனது பேரன்கள் மற்றும் இறந்து போன மகன் கதிர்வேல் மகன்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் 4,5 பிரதிவாதிகளுக்கும் பாகம் உள்ளது என்றால் சரிதான். 4.11.2011 தேதியிட்ட பாகப்பிரிவினை மற்றும் 23.9.2013 தேதியிட்ட கிரைய ஆவணங்கள் 13.12.2013 தேதியிட்ட கிரைய ஆவணங்கள் 4,5 மைனர் பிரதிவாதிகள் உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் எனது மகன்களுடன் ஏற்படுத்திக்கொண்ட ஆவணங்கள் சம்பந்தமாக 4,5 மைனர் பிரதிவாதிகளுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டால் அதை எனது தனிப்பட்ட சொத்திலிருந்து ஈடு செய்ய வேண்டும் என்றல் சரியல்ல. மைனர் 4,5 பிரதிவாதிகளின் தாயாரும், காப்பாளருமான 3ம் பிரதிவாதி இந்த வழக்கில் எதிர்வாதம் செய்ய முன்வராததால் இளவர்களின் நலன்பாதிக்காதவாறு இந்த வழக்கில் தீர்ப்பு பிறப்பிக்கப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**